| | |
|---|---|
| விடுநர் | பெறுநர் |
| திரு.பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப.,<br>மாவட்ட ஆட்சித் தலைவர்,<br>மாவட்ட ஆட்சியரகம்,<br>வேலூர் மாவட்டம்,<br>வேலூர்-9. | அனைத்து துறை தலைவர்கள்,<br>வேலூர் மாவட்டம். |

ஓ.மு.அ4/2315/2022, நாள்: 04/04/2022

அய்யா/அம்மையீர்,

பொருள்: பொதுப்பணி – வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் - தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதுதல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – அரசாணையினை நடைமுறைப்படுத்திட கேட்டுக்கொள்ளப்பட்டது – நடவடிக்கைக்காக அனுப்புதல் - தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண் 140 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.1.1) துறை, நாள்:02.11.2021.
2. தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களின் கடித எண்.8101/ஆ.மொ.3/2021, நாள்:17.12.2021.
3. இணை ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், சேப்பாக்கம் அவர்களின் கடிதம் ந.க.எண்.அ.ந.1(1)/33/29/2022, நாள்: 24.02.2022.

********

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்களில் தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதுதல் வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. தகவலுக்காகவும் நடவடிக்கை எடுக்கும் பொருட்டும் பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதங்களின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/-ப்பி.விஜயராகவன்,
மாவட்ட ஆட்சியருக்காக,
வேலூர்.

இணைப்பு: மேற்சொன்னவாறு.

/ஆணைப்படி/

அலுவலக மேலாளர் (பொது).
5/4/22

5/4/2022

2315

**வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம்**

| | |
|---|---|
| அனுப்புநர்:– | பெறுநர்:– |
| இணை ஆணையர், | அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் |
| (வருவாய் நிருவாகம்), | (இணைப்புடன்) |
| வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் | |
| மேலாண்மை ஆணையரகம், | |
| சேப்பாக்கம், சென்னை – 5. | |

**ந.க.எண். அ.ந.1(1) / 33 / 29 / 2022, நாள் 24.02.2022**

ஐயா / அம்மையீர்,

X4
மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் 01 APR 2022 வேலூர் மாவட்டம்

பொருள்:– பொதுப்பணி – வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம் – தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதுதல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது – அரசாணையினை நடைமுறைப்படுத்திட கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

பார்வை:–
1. அரசாணை (நிலை) எண் 140 தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ.1.1)த்துறை, நாள் 02.11.2021.
2. தமிழ்வளர்ச்சித்துறை இயக்குநர் கடித எண் 8101/ஆ. மொ.3/2021 நாள் 17.12.2021.

✈ ✈ ✈ ✈ ✈ ✈

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதம் உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை தவறாது நடைமுறைப்படுத்துமாறும், தங்கள் கட்டுப்பாட்டிலுள்ள அலுவலங்களில் தவறாது நடைமுறைப்படுத்த அறிவுறுத்தமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,
ஒம்/–ஜெ.ரவிகுமார்
துணை ஆணையர்(நிருவாகம்)
இணை ஆணையர் (வ.நி)க்காக

உதவி ஆணையர் – 3
இணை ஆணையர் (வ.நி)க்காக

2/3/22

தமிழ் வளர்ச்சித் துறை

அனுப்புநர்

திரு. செ. சரவணன், இ.ஆ.ப.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர் (மு.கூ.பொ),
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
தமிழ் வளர்ச்சி வளாகம் முதல் தளம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை - 600 008.

பெறுநர்

110. வருவாய் நிர்வாகம் ஆணையர்,
வருவாய் நிர்வாகம்,
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை - 600005

001703
12 JAN 2022

திருவள்ளுவராண்டு 2052 / பிலவ / மார்கழி - 02
ந.க.எண்.8101 / ஆ.மொ.3 /2021, நாள். 17.12.2021

ஐயா,

பொருள்: தமிழ் வளர்ச்சி - பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதுதல் -அரசாணை வெளியிடப்பெற்றுள்ளமை - அரசாணையினை நடைமுறைப்படுத்திட கேட்டுக் கொள்ளல் - தொடர்பாக.

பார்வை: 02.11.2021ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண். 140, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 1.1)த் துறை.

............

2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையில் **"தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையைப் பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பொது மக்களும் பொதுப் பயன்பாடுகளில் இம்முறையைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படும்"** என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அவ்வறிவிப்பிற்கிணங்கவும் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தினை முழுமையாக செயற்படுத்தும் பொருட்டும் பின்வருமாறு வலியுறுத்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. **(அரசாணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது)**

**அரசாணையில் இடம் பெற்றுள்ள முக்கிய இனங்கள் :-**

1) மாண்புமிகு முதலமைச்சர் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை அனைத்து அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் தமிழிலேயே கையொப்பம் இடவும், அதில் முன்னெழுத்துகளையும் தமிழிலேயே எழுதப்பட வேண்டுமாறு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளை மீண்டும் வலியுறுத்தப்படுகிறது.

2) தொட்டில் பழக்கம் எனத் தொடங்கும் பழமொழிக்கேற்ப மாணவர்களின் தொடக்க கல்வி முதல் கல்லூரி காலம் வரையில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு தமிழை முதன்முதலில் மாணவர்களது பெயரில் சேர்ப்பது சிறப்பானதாக அமையும். பள்ளி, கல்லூரி மாணவர்களிடையே தமிழில் பெயர் எழுதும் போது அதன் முன்னெழுத்தையும் தமிழில் எழுதும் நடைமுறையினை அன்றாட வாழ்வில் கொண்டு வர மாணவர்கள்

பள்ளிக்கு சேர அளிக்கும் விண்ணப்பம், வருகை பதிவேடு, பள்ளி, கல்லூரி முடித்து பெறும் சான்றிதழ் வரையில் அனைத்திலும், தமிழ் முன்னெழுத்துடனே வழங்கும் நடைமுறையினை கொண்டு வரவும். மேலும், மாணவர்கள் கையொப்பமிடும் சூழ்நிலைகள் அனைத்திலும் தமிழ் முன்னெழுத்துடனே கையொப்பமிட அறிவுறுத்தப்படுகிறது.

3) தலைமைச் செயலகம் முதல் கடைநிலை அரசு அலுவலகம் வரை அனைத்து அரசுத் துறைகளிலும் வெளியிடப்படும் ஆணைகள் மற்றும் ஆவணங்கள் பொது மக்களின் பெயர்கள் குறிப்பிடும் போது முன்னெழுத்துகள் உட்பட பெயர் முழுமையையும் தமிழிலேயே பதிவு செய்யப்பட அறிவுறுத்தப்படுகிறது. மேலும், அரசு துறைகளில் பெறப்படும் விண்ணப்பங்களிலும், தமிழ் முன்னெழுத்துடன் கையொப்பத்தினையும் தமிழிலேயே இடுமாறு பொது மக்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4) பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், அனைத்து அரசு அலுவலகங்களிலும் பொது மக்கள் பார்வையில் படும் வகையில் தமிழின் பெருமையை சுட்டிக்காட்டியும், "முன்னெழுத்தும் தமிழில் கையொப்பமும் தமிழில்" கையொப்பமிடுவதை பெருமிதப்படுத்தும் வகையில் அரசாணை பத்தி (4)-இல் தெரிவிக்கப்பெற்றவாறு கீழ்க்கண்டவாறு சுவரொட்டிகள் அமைத்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பொதுமக்களுக்கு வேண்டுகோள் | மாணவ மாணவியர்களுக்கு வேண்டுகோள் |
|---|---|
| கோரிக்கை விண்ணப்பங்களில் பெயரின் முன்னெழுத்தும் (Initials), கையொப்பமும் தமிழில் இடவும் | பெயரின் முன்னெழுத்தும் கையொப்பமும் தமிழில் இடவும் |

எனவே, அரசாணையில் குறிப்பிடப்பெற்றுள்ள நடைமுறைகளை தங்கள் துறை மற்றும் தங்கள் துறைச் சார்ந்த அலுவலகங்களிலும் தவறாது நடைமுறைப்படுத்தி ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்குமாறும் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இணைப்பு : அரசாணை

ஒம்/- செ. சரவணன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்(மு.கூ.பொ)

// உண்மை நகல் //

7/1/2022

தமிழ் வளர்ச்சி இயக்குநருக்காக

சுருக்கம்

தமிழ் வளர்ச்சி - பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதுதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி(த.வ 1.1)த் துறை

அரசாணை (நிலை) எண்.140

நாள் 02.11.2021
பிலவ, ஐப்பசி - 16
திருவள்ளுவராண்டு 2052

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.1134, கல்வி (தவ) துறை, நாள் 21.06.1978.
2. அரசு கடித எண். 3911/தவ1.1 /1997/1, நாள் 15.04.1997.
3. அரசாணை (நிலை) எண்.431, தமிழ் வளர்ச்சி, பண்பாடு (ம) அறநிலைய(தவ1.1)த் துறை, நாள் 16.09.1998.

மேலும் படிக்க:

4. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கடித எண்.8101/ ஆமொ3/ 2021, நாள் 15.09.2021.

******

ஆணை:

2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை 46-இன் போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு அறிவிக்கப்பட்டது (அறிவிப்பு எண்.11) :-

"தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையைப் பள்ளி, கல்லூரி மற்றும் அரசு ஆவணங்களில் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களும் பொதுப் பயன்பாடுகளில் இம்முறையைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படும்."

2) மேற்படி அறிவிப்பு தொடர்பாக தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்கள் தனது 15.09.2021-ஆம் நாளிட்ட கடிதத்தில், தமிழ்நாடு அரசின் ஆட்சி நிருவாகத்தில் முழுமையாகத் தமிழ் பயன்பாட்டு மொழியாக இருக்கச் செய்திடும் வகையில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் 1956ஆம் ஆண்டு இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது என்றும், தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தின் முதன்மைப் பணியாக அரசு அலுவலகங்களில் அரசு அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரும் தமிழிலேயே ஒப்பமிட வேண்டும் என முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டு நடைமுறையில் உள்ளது என்றும், இதனைத் தொடர்ந்து அரசு அலுவலர்கள், பணியாளர்கள் தங்கள் பெயரின் தலைப்பெழுத்துக்களை (Initials) (தந்தை, தாய், ஊர்) பெயர்களை குறிப்பிடும் முன் எழுத்துக்கள் தமிழில் மட்டுமே எழுதவேண்டும் என மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது என்றும், மேலும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் அரசுத் துறைகளில் வெளியிடப்படும் அறிவிப்புகள், அறிவிக்கைகள், ஏல விளம்பரங்கள், இதர விளம்பரங்கள் போன்றவை வெளியிடுகையில் அதில் அலுவலர்களின் பெயர்களுக்குமுன் குறிப்பிடப்படும் முன்னெழுத்தானது ஆங்கில எழுத்து உச்சரிப்பிற்கான தமிழ்எழுத்து (எஸ்.முத்து) எழுதப்படுகிறது. இதனைத் தவிர்த்துச் சரியாக தமிழ் முன் எழுத்தையே (சு. முத்து) பயன்படுத்துமாறும் அவ்வாறே அரசு அலுவலர்கள் கையொப்பமிடும் போது பெயருக்கு முன் சரியான தமிழ் எழுத்துக்களையே குறிப்பிட்டு கையொப்பமிடுமாறும் அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்வாறு கையொப்பம் மற்றும் முன்னெழுத்து ஆகியவற்றை தமிழில் எழுத பல்வேறு அரசாணைகள் மூலம் தெரிவிக்கப் பெற்றிருந்தும் அரசு அலுவலர்கள் கூட முன்னெழுத்தை முழுமையாகத் தமிழில் எழுதுவதில்லை என்றும், எனவே மேற்கண்ட அரசாணைகளின் அடிப்படையிலும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பினை செயற்படுத்தும் வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் இ.ஆ.ப, இ.கா.ப போன்ற உயர் அலுவலர்கள் முதல் கடை நிலை ஊழியர்கள் வரை அனைத்து அரசு ஊழியர்களும் அனைத்து இனங்களிலும் தங்களின் பெயர்களை எழுதும் போதும் ஒப்பமிடும் போதும் முன்னெழுத்தையும் தமிழிலேயே எழுதப்பட வேண்டும் என மீண்டும் வலியுறுத்தி ஆணை பிறப்பிக்கப் பெறலாம் என்றும், மேலும் அறிவிப்பிற்கிணங்க பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களிடையே தமிழில் பெயர் எழுதும்போது அதன் முன்னெழுத்தையும் தமிழிலேயே எழுதும் நடைமுறையினை கொண்டு வர மாணவர்கள் விண்ணப்பம் அளிக்கும் போதும், பள்ளி, கல்லூரி முடித்து சான்றிதழ் பெறும்போதும் முன்னெழுத்தும் கையொப்பம் தமிழிலேயே இருந்தால் மட்டுமே சான்றிதழ் வழங்கும் நடைமுறையினை கொண்டு வரப்பெறலாம் என்றும், அதே

போன்று மாணவர்களின் சான்றிதழை பெற்றோர் கையொப்பமிட்டு பெறும்போதும் முன்னெழுத்து மற்றும் கையொப்பத்தினை தமிழிலேயே இடப்பெற வேண்டும் எனத் தெரிவிக்கப் பெறலாம். பள்ளிப் பருவத்திலேயே இந்நடைமுறையினை ஊக்குவிப்பதால் மாணவர்களின் மனதில் பசுமரத்து ஆணி போல பதிய வழிவகுக்கும்.

3) மேலும், பொதுமக்கள் அதிகம் அணுகும் அரசுத் துறைகளான மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், மின்சார வாரியம், போக்குவரத்துத் துறை, பத்திரப் பதிவுத் துறை, வருவாய்த் துறை, வணிகவரித் துறை, சமூக நலத் துறை, காவல் நிலையம், உணவுப் பொருள் வழங்கல் துறை ஆகியவற்றில் பொதுமக்களால் நிறைவு செய்து அளிக்கப்பெறும் கோரிக்கை விண்ணப்பங்களில் முன்னெழுத்துடன் தமிழில் கையொப்பம் இடும் வகையில் நடைமுறைப்படுத்தப் பெறலாம் (உ.ம். K. N.சுவாமிநாதன் என்பதை க.ந. சுவாமிநாதன்).ஏனைய அரசுத் துறைகளான வாரியங்கள், கழகங்கள் மற்றும் தன்னாட்சி நிறுவனங்கள் என அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்திடலாம் என்றும், மேலும் அனைத்துத் துறைகளிலும் அரசு ஆவணங்களில் பதிவு செய்யப்படும் பெயர்களில் முன்னெழுத்தையும் தமிழ், ஆங்கிலம் கலந்து பதிவு செய்யாமல் பெயரின் முன்னெழுத்து மற்றும் பெயர்களை முழுமையாகத் தமிழிலேயே பதிவு செய்யப்பட வேண்டும் எனவும் ஆணையிடப் பெறலாம்.

4) அரசு அலுவலகங்களில் பொதுமக்கள் பார்க்கும் வகையில் "இலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம்", "புகைப்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம்" போன்ற சுவரொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளதைப் போன்று பள்ளி, கல்லூரி மாணவர்களிடத்திலும் மற்றும் பொது மக்களிடமும் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் அலுவலகங்களில் பொதுமக்கள் பார்வையில் படும் வகையில் "முன்னெழுத்தும் தமிழில் கையொப்பமும் தமிழில்" என கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு சுவரொட்டிகள் அமைத்து நடைமுறைப் படுத்திடலாம் என்றும் தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| <u>பொதுமக்களுக்கு வேண்டுகோள்</u> | <u>மாணவ மாணவியர்களுக்கு வேண்டுகோள்</u> |
|---|---|
| கோரிக்கை விண்ணப்பங்களில் பெயரின் முன்னெழுத்தும் (Initials), கையொப்பமும் தமிழில் இடவும். | பெயரின் முன்னெழுத்தும், கையொப்பமும் தமிழில் இடவும். |

5) அரசின் கவமான பரிசீலனைக்கு பின், 2021-2022-ஆம் ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில் இடம்பெற்ற அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக, தமிழ் வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்துருவினை ஏற்று, தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தினை முழுமையாக செயற்படுத்தும் பொருட்டு பின்வருமாறு ஆணையிடலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது :-

i) மாண்புமிகு முதலமைச்சர் முதல் கடைநிலை ஊழியர்கள் வரை அனைத்து அரசு அலுவலர்கள் / பணியாளர்கள் தமிழிலேயே கையொப்பம் இடவும், அதில் முன்னெழுத்துகளையும் தமிழிலேயே எழுதப்பட வேண்டுமாறு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளை மீண்டும் வலியுறுப்படுகிறது.

ii) தொட்டில் பழக்கம் எனத் தொடங்கும் பழமொழிக்கேற்ப மாணவர்களின் தொடக்க கல்வி முதல் கல்லூரி காலம் வரையில் தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்கும் பொருட்டு தமிழை முதன்முதலில் மாணவர்களது பெயரில் சேர்ப்பது சிறப்பானதாக அமையும். பள்ளி கல்லூரி மாணவர்களிடையே தமிழில் பெயர் எழுதும் போது அதன் முன்னெழுத்தையும் தமிழில் எழுதும் நடைமுறையினை அன்றாட வாழ்வில் கொண்டு வர மாணவர்கள் பள்ளிக்கு சேர அளிக்கும் விண்ணப்பம், வருகை பதிவேடு, பள்ளி, கல்லூரி முடித்து பெறும் சான்றிதழ் வரையில் அனைத்திலும்; தமிழ் முன்னெழுத்துடனே வழங்கும் நடைமுறையினை கொண்டு வரவும். மேலும், மாணவர்கள் கையொப்பமிடும் சூழ்நிலைகள் அனைத்திலும் தமிழ் முன்னெழுத்துடனே கையொப்பமிட அறிவுறுத்தப்படுகிறது:

iii) தலைமைச் செயலகம் முதல் கடைநிலை அரசு அலுவலகம் வரை அனைத்து அரசுத் துறைகளிலும் வெளியிடப்படும் ஆணைகள் மற்றும் ஆவணங்கள் பொது மக்களின் பெயர்கள் குறிப்பிடும் போது முன்னெழுத்துகள் உட்பட பெயர் முழுமையையும் தமிழிலே பதிவு செய்யப்பட அறிவுறுத்தப்படுகிறது. மேலும், அரசு துறைகளில் பெறப்படும் விண்ணப்பங்களிலும், தமிழ் முன்னெழுத்துடன் கையொப்பத்தினையும் தமிழிலேயே இடுமாறு பொது மக்களை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

iv) பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில், அனைத்து அரசு அலுவலகங்களிலும் பொது மக்கள் பார்வையில்படும் வகையில் தமிழின் பெருமையை சுட்டிக்காட்டும், "முன்னெழுத்தும் தமிழில் கையொப்பமும் தமிழில்" கையொப்பமிடுவதை பெருமிதப்படுத்தும் வகையில் பத்தி 4-இல்

தெரிவிக்கப்பட்டவாறு சுவரொட்டிகள் அமைத்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

6) இந்த அரசாணை வெளியிடப்படும் நாளிலிருந்து நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்:

அனைத்து துறைச் செயலாளர்கள்
தலைமைச் செயலகம், சென்னை -9.
அனைத்து துறைத் தலைவர்கள்
(தமிழ் வளர்ச்சி இயக்குநர் வழியாக)
இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, சென்னை-8.
உயர்நீதிமன்ற பதிவாளர், சென்னை-104.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (தொழில் துறை) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்
02.11.2021
02/11/2021